ISSN : 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

# திருக்குறளில் காணப்படும் சித்தர்களின் தனிமனிதக் கோட்பாடுகள்

**கட்டுரையாளர்**
**முனைவர் ஆ.சந்திரசேகரன்**
உதவிப் பேராசிரியர்
தமிழ்உயராய்வுத்துறை
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
நாமக்கல் மாவட்டம்.

## ஆய்வுச்சுருக்கம்

ஒரு சமூகம் சிறப்புற அமைய தனி மனிதனின் ஒழுக்க நெறிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஒவ்வொரு சமூகத்திலும் வாழும் மக்கள் தங்களுக்கென்று கட்டுப்பாடுகளையும் கோட்பாடுகளையும் வரையறுத்து வாழ்வதே இன்றியமையாததாகின்றது. சித்தர்கள் எழுதிய நூல்களில் தனிமனித ஒழுக்கம் சார்ந்த செய்திகள் காணப்படுகின்றன. அவை மனிதனிடம் உள்ள தீய பழக்கங்களை விடுத்து நல்வழியில் செல்வதற்கு வழிகாட்டுகின்றன. அவர்கள் கூறும் நல்வழியில் மனிதன் சென்றால் அவன் வாழ்வும் அவனைச் சார்ந்தவர்கள் வாழ்வும் சிறப்படையும். தனி மனிதனை உயர்த்தும் வகையில் சித்தர்களின் தனிமனிதக் கோட்பாடுகள் அமைந்துள்ளன. இக்கட்டுரையில் சித்தர்கள் தங்கள் நூல்களில் ஆங்காங்கே கூறிச் சென்றுள்ள தனிமனித ஒழுக்கம் சார்ந்த கருத்துக்களை, ஒரு மனிதன் எவ்வாறு ஒழுக்கத்துடன் வாழ வேண்டும் என்பதை திருவள்ளுவர் எவ்வாறு வெளிப்படுத்தயுள்ளார் என்பதையும் ஆராயும் விதமாக அமைந்துள்ளது.

## முன்னுரை

தனிமனித ஒழுக்கம் மனிதனிடம் தோன்றும் நற்குணங்களுக்கும் தீயகுணங்களுக்கும் காரணமாக அமைகின்றன. உலகில் தோன்றிய பல சான்றோர்கள் மக்கள் வாழ வேண்டிய

*முறையினை வருங்காலத் தலைமுறையினருக்கு தங்களின் இலக்கியங்கள் வாயிலாகவும் தாங்களே வாழ்ந்து காட்டியும் சென்றுள்ளனர். அவ்வாறான சான்றோர்களில் திருவள்ளுவரின் பங்கு மிக முக்கியமானதாகும். திருக்குறள் எனும் அரிய நூலின் வாயிலாக உலக மக்களுக்கு பல்வேறு கருத்துகளைக் கூறிச் சென்றுள்ளார்.*

***பசிப்பிணி நீக்குதல்***

*மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் அறம் செய்வதை தன்னுடைய கடமையாகக் கொண்டு செயல்படுதல் வேண்டும். பொருளையும், உணவையும், பிறர்க்குக் கொடுத்து வாழும் அறவாழ்வு உயர்வானதாகும். உண்ணும் போது இறைவனுக்கு ஒரு பச்சிலை இடுவதும், பசுவிற்கு புல் அளித்தலும், தாம் உண்ணம் போது வறியவர்க்கு ஒரு பிடி உணவு அளித்தலும், பிறரிடம் இன்சொல்லால் உரையாடுவதும் அறங்களௌன திருமூலர்,*

*"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை*

*யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுரை*

*யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி*

*யாவர்க்கு மாம்பிறர்; கின்னுரை தானே"1*

*என்ற பாடல் மூலம் எடுத்துரைக்கிறார்.*

*வள்ளுவரின் வாழ்வியல் சார்ந்த கருத்துக்களில் தனிமனித ஒழுக்கம் சார்ந்த கருத்துகள் மிக முக்கியமானதாகும். மனிதன் வாழ வேண்டிய முறையையும் தன் வாழ்வில் கைவிட வேண்டியவை பற்றியும் வரையறுத்துள்ளார். திருவள்ளுவரின் தனிமனிதக் கோட்பாடுகளில் பசிப்பிணி நீக்குதலும் பிற உயிர்களின் மேல் இரக்கம் செலுத்துவதும் முதன்மை இடம் வகிக்கின்றன.*

*"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே*

*உண்டி முதற்றே உணவின் பிண்டம் ஒன்று"2*

*என்ற புறநானூற்று அடிகள் மனித வாழ்வில் உணவின் தேவையினையும் உணவின் இன்றியமையாமையையும் கூறுவனவாக அமைந்துள்ளன. மனித உடலுக்கு உணவினைக் கொடுப்பவர் உயிர் கொடுப்பவராக கருதப்படுவர். உடலுக்கு உணவின் தேவையை வற்புறுத்திக் கூறும் விதமாக அமைந்துள்ளது. மேலும் புறநானூற்றின் மற்றொரு பாடலான,*

*"வல்லுநர் ஆயினும் வருந்தி வந்தோர்*

*மருங்கு நோக்கி அருள வல்லை ஆகுமதி" 3*

*என்ற பாடல் பசியால் வருந்தி வருபவருக்கு உணவளிக்க வேண்டும் என்ற கருத்தினை முன் நிறுத்துவதாக அமைந்துள்ளது. ஒருவன் பசியால் வருந்தித் துன்பப்படுவதைப் பார்க்கின்ற போது அவன் துன்பத்தை நீக்குவதுதான் மனிதாபிமான செயல் ஆகும். தவ வலிமை*

*உடையவரின் வலிமை பசியைப் பொறுத்துக் கொள்ளுதலாகும். அதுவும் அப்பசியை உணவு கொடுத்து மாற்றுகின்றவரின் ஆற்றலுக்குப் பிற்பட்;டதாகும் என்பதை,*

*"ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை*

*மாற்றுவா ராற்றலிற் பின்" (குறள்225)*

*என்ற குறள் மூலம் அறியலாம். வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும் அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும். இதனை,*

*"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்*

*பெற்றான் பொருள்வைப் புழி" (குறள்- 226)*

*என்னும் குறள் வலியுறுத்துகிறது.*

***புலால் உண்ணாமை***

*ஆதிகாலத்தில் காடுகளும் மலைகளும் விலங்குகளோடு விலங்காக வாழ்ந்த மனிதன் நாகரிகத்தின் தாக்கம் காரணமாக அவர்களிடமிருந்து தனித்து வாழத் தொடங்கினான். அவ்வாறு வாழ்வதே தன் சுயநலத்திற்காக பிற உயிரினங்களை உணவாகக் கொண்டு வாழ்ந்தான. உயிர்களைக் கொல்லுதல் என்பது மனித இனம் தோன்றியதிலிருந்து நடந்து வருகிறது.*

*"உண்போன் தான் நறுங் கள்ளின் இடச் சில"4*

*என்பதில் இறைச்சியும் மதுவும் உண்டு மகிழ்வார் என்றும், மற்றொரு பாடலில் புறா மற்றும் முயல் இறைச்சியை உண்டனர் என்பதை,*

*"புறவும் இதலும் அறவும் உண்கெனப்*

*பெய்தற்கு எல்லின்று பொழுதே அதனால்*

*முயல் சுட்ட வாயினும் தருகுவோம்"5*

*எனும் புறநானூற்று பாடலும் கூறுகின்றன. இதன் மூலம் பண்டைக்காலம் முதலே மனிதர்கள் தாங்கள் வாழ்தல் வேண்டிப் பிற உயிரினங்களைக் கொன்று உண்ணும் பழக்கம் இருந்ததை அறியலாம். உணவைப் பிறருக்கு கொடுத்து உதவ வேண்டும் என்று கூறிய திருவள்ளுவர் அசைவ உணவினைத் தவிர்த்து சைவ உணவினையே உண்ண வேண்டும் எனக் கூறுகிறார்.*

*புலால் உண்ணாமை என்பது தனி மனித ஒழுக்கங்களில் இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகின்றது. வள்ளலார் மேலும் கூறும்போது,*

*"புரைசேரும் கொலைநெறியும் புலை நெறியும் சிறிதும்*

*பொருந்தாமல் எவ்வுயிரும் புரிந்துவத்தல் வேண்டும்"6*

*என்கிறார். திருஅருட்பாவின் இப்பாடல் வரிகள் கொலை செய்யாமலும், புலால் உண்ணாமலும் எவ்வுயிருக்கும் தீங்கு செய்யாமல் இருக்க வேண்டும் என்கிறது.*

*“அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல்*

*பொருளல்லது அவ்வூன் தினல்”. (குறள்:254)*

*அருள் எது என்றால் ஓர் உயிரையும் கொல்லாமலிருத்தல் அருளல்லாதது எது என்றால் உயிரைக் கொல்லுதல்; அதன் உடம்பைத் தின்னுதல் அறம் அல்லாதது.*

*“தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான்*

*எங்ஙனம் ஆளும் அருள்” (குறள் 251)*

*தன் உடலை வளர்ப்பதற்கு மற்றொரு உயிரைப் பிரித்து உண்போருக்கு அருள் கிடைக்காது. எனவே புலால் உண்ணாமல் சைவ உணவினை உண்ண வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார் மேலும் புலால் உண்ணாமல் இருப்பவர்களை பற்றி அவர் கூறும்போது*

*“கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*

*எல்லா உயிரும் தொழும்” (குறள் 260)*

*உயிர்க்கொலை செய்யாதவரை உலகில் உள்ள அனைவரும் வணங்குவர் என்ற கருத்தை திருவள்ளவர் முன் வைக்கிறார்.*

**கள்ளுண்ணாமை**

*சங்ககால மக்கள் உடலுழைப்பினால் ஏற்படும் களைப்பினை நீக்கவும், மனமகிழ்ச்சிக்காகவும் புலால் உணவோடு கள்ளுண்ணும் பழக்கம் இருந்தது. இப்பழக்கத்தை சித்தர்கள் கண்டித்துள்ளனர்.*

*“கஞ்சாப் புகைபிடி யாதே - வெறி*

*காட்டி மயங்கியே கட்குடி யாதே*

*அஞ்ச வுயிர்மடி யாதே - புத்தி*

*அற்றவஞ் ஞானத்தி னூல்படி யாதே” 7*

*என்று கடுவெளிச்சித்தர் கண்டிக்கிறார்.*

*கள்ளின் மேல் விருப்பம் கொண்டு நடப்பவர், எக்காலத்திலும் பகைவரால் அஞ்சப்படார், தமக்கு உள்ள புகழையும் இழந்து விடுவார். இதனைத் திருவள்ளுவர்,*

*“உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்*

*கட்காதல் கொண்டொழுகு வார்” (குறள் 921)*

*என்று கூறுகிறார். உறங்கினவர் இறந்தவரை விட வேறுபட்டவர் அல்லர், அவ்வாறே கள்ளுண்பவரும் அறிவுமயங்குதலால் நஞ்சு உண்பவரே ஆவர். என்பதை,*

*“துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்*

*நஞ்சுண்பார் கள்ளுண் பவர்” (குறள் 926)*

*என்ற குறள் மூலமாக உணர்த்துகிறார்.*

**பெண் பற்று விடல்**

*ஒரு மனிதன் கள்ளை உண்பதனால் அறிவு கலக்கமடையும் அப்போது அவன் பெண்ணின்பத்தைத் தேடிச் செல்வான். அத்தகைய இன்பம் அவனுக்குத் தீங்கினையே விளைவிக்கும். ஆகவே அதிலிருந்து விடுபட சித்தர்கள் அறிவுரை கூறுகின்றனர்.*

*மனித இனத்தைச் சீரழிப்பதில் காமத்தின் பங்கு மிக முக்கியமானதாகும் பெண்களின் மேல் கொண்ட காமத்தின் காரணமாக ஏற்பட்ட விளைவுகளை பண்டைய இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது பழங்காலம் முதலே பெண்கள் மேற்கொண்டது மிகுதியாகக் காணப்படுகின்றது பெண்களின் மேல் கொண்ட பற்றினால் பல மன்னர்கள் தங்களின் நாடுகளையும் தங்களின் வாழ்க்கையை இழந்த நிலையில் இலக்கியங்களும் சிலப்பதிகாரமும் முதலான காப்பியங்களும் தெளிவுபடுத்துகின்றன.*

*அழகிய பெண்ணை மணம் முடித்த ஆடவன், அப்பெண்ணை பாதுகாத்து வைக்கும் போது, இடையில் அந்தப் பெண் இறந்து போனால், அந்தப் பெண்ணின் உடலை அழகு என்று வைத்திருக்காமல் எரிக்கவோ, புதைக்கவோ தோட்டியின் கையில் கொடுப்பான். என்பதை*

*“வடிவுகண்டு கொண்ட பெண்ணை மற்றொருவன்*

*விடுவனோ அவனை முன்னர் வெட்டவேண்டும் என்பனே*

*நடுவன் வந்து அழைத்த போது நாறும் இந்த நல்லுடல்*

*சுடலை மட்டும் போய்த் தோட்டி கைக்கொடுப்பரே” 8*

*என்ற பாடலில், உடல் என்பது நிலையில்லாதது என்று சிவவாக்கியர் தம் பாடலில் எடுத்துக் காட்டியுள்ளார்.*

*“காசையும் பணத்தையும் கண்ணியர் தமையும்*

*காணியின் ஆட்சியும் கருதிலேன் கண்டீர்”9*

*என்னும் திருவருட்பாவின் இவ்வரிகள் பணத்தின் மேல் கொண்ட பற்றினையும் நிலத்தின் மேல் கொண்ட பற்றினையும் பெண்களின் மேல் கொண்ட பற்றினையும் நான் விட்டு விட்டேன் என வள்ளலார் கூறுகிறார். இதனைத் திருவள்ளுவர்,*

*“மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்*

*வேண்டாப் பொருளும் அது" (குறள் 90)*

*என்னும் குறளில் மனதில் தீய எண்ணங்கள் தோன்றாமல் இருக்க பெண்களின் மேல் பற்று கொள்ளக் கூடாது என்று கூறுகிறார்.*

*"அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்*

*இன்சொல் இழுக்குத் தரும்". (குறள் 911)*

*அன்பினால் விரும்பாமல் பொருள் காரணமாக விரும்புகின்ற பொது மகளிர் பேசுகின்ற இனிய சொல், ஒருவனுக்கு துன்பத்தைக் கொடுக்கும் என்றும்,*

*"வரைவிலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்*

*பூரியர்கள் ஆழும் அளறு" (குறள்.919)*

*ஒழுக்க வரையரை இல்லாத பொது மகளிரின் மெல்லிய தோள், உயர்வில்லாத கீழ்மக்கள் ஆழ்ந்து கிடக்கின்ற நரகமாகும் என்றும் கூறுகிறார்.*

**பணப்பற்று விடுதல்**

*மனிதன் இவ்வுலகில் வாழ பொருள் தேவை ஆனால் அப்பொருள் மீது பேராசை கொள்ளக் கூடாது. அவ்வாறு பேராசை கொண்டால் அது ஒருவனுக்குத் துன்பத்தைத் தருவதாக அமையுமே அன்றி அது என்றும் இன்பத்தைத் தராது. என அறிஞர் பலர் கூறுகின்றனர்.*

*இதனை, சிவவாக்கியர் மிகப்பெரிய அளவில் வீடும், நீண்ட வாசல் கதவும் அமைத்து வாழ்வதற்காக எண்ணி வீடு கட்டும் மனிதர்களே இயமனின் கடிதம் வந்து பிடிக்கும்போது அந்த பெரிய வீட்டை விட்டு நிற்பீர்கள் அது மடமை என்கிறார். .இதனை,*

*"நீளவீடு கட்டுறீர் நெடுங்கதவு சாத்துறீர்*

*வாழவேணும் என்றலோ மகிழ்ந்திருந்த மாந்தரே*

*காலன்ஓலை வந்தபோது கையகன்று நிற்பிரே*

*ஆலமுண்ட கண்டர் பாதம் அம்மைபாதம் உண்மையே" 10*

*என்ற பாடல் மூலம் மனிதன் சேர்க்கும் பணம் அவனுடனே வருவதில்லை என்கிறார். மேலும்,*

*"ஆடுநாடு தேடினும் ஆனைசேனை தேடினும்*

*கோடிவாசி தேடினும் குறுக்கேவந்து நிற்குமோ" 11*

*என்றும் கூறுகிறார். இதே கருத்தை திருவள்ளவர்,*

*"கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்*

*போக்கும் அதுவிளிந் தற்று." (குறள் 332)*

*என்ற குறளில் சேர்த்து வைத்த பணமும் சொத்தும் ஒருவரை விட்டுப் போவது கூத்து முடிந்ததும் மக்கள் அரங்கத்தை விட்டுக் கலைந்து செல்வதைப் போன்றதாகும் என்று கூறுகிறார்.*

**முடிவுரை**

*மனிதனை உயர்த்தும் வகையில் சித்தர்களின் தனிமனிதக் கோட்பாடுகள் அமைந்துள்ளன. அவர்கள் கூறும் நல்வழியில் மனிதன் சென்றால் அவன் வாழ்வும் அவனைச் சார்ந்தவர்கள் வாழ்வும் சிறப்படையும். அத்தகைய கோட்பாடுகள் திருக்குறளிலும் அமைந்துள்ளன.*

*திருவள்ளுவரின் தனிமனிதக் கோட்பாடுகளில் பசிப்பிணி நீக்குதலும் பிற உயிர்களின் மேல் இரக்கம் செலுத்துவதும் முதன்மை இடம் வகிக்கின்றன.*

*புலால் உண்ணாமல் இருப்பவர்களை உலகில் உள்ள அனைவரும் வணங்குவர் என்ற கருத்தை திருவள்ளவர் முன் வைக்கிறார்.*

*கள்ளுண்பவர்கள் உறங்கினவர் இறந்தவரை விட வேறுபட்டவர் அல்லர், அவ்வாறே கள்ளுண்பவரும் அறிவுமயங்குதலால் நஞ்சு உண்பவரே ஆவர்.*

*அன்பினால் விரும்பாமல் பொருள் காரணமாக விரும்புகின்ற பொது மகளிர் பேசுகின்ற இனிய சொல், ஒருவனுக்கு துன்பத்தைக் கொடுக்கும் என்றும் அது நரகம் என்றும் போலிப் பெண் பற்றை விளக்குகிறார்.*

*சேர்த்து வைத்த பணமும் சொத்தும் ஒருவரை விட்டுப் போவது கூத்து முடிந்ததும் மக்கள் அரங்கத்தை விட்டுக் கலைந்து செல்வதைப் போன்றதாகும் என்று பொருள் செல்வத்தின் நிலையாமை பற்றிக் கூறியுள்ளார்.*

**சான்றெண் விளக்கம்**

*1 .அண்ணாமலை சுப.டாக்டர்(உ.ஆ) (1997), இந்தியப் பண்பாடு ஆராய்ச்சி*

*நிறுவனம் திருமந்திரம.;, பா.251*

*2.துரைசாமிப்பிள்ளை ஔவை சு. (2007), புறநானூறு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., 522, டி.டி.கே.சாலை, ஆள்வார்பேட்டை, சென்னை-18. பா.18*

*3.துரைசாமிப்பிள்ளை ஔவை சு. (2007), புறநானூறு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., 522, டி.டி.கே.சாலை, ஆள்வார்பேட்டை, சென்னை-18. பா.27*

*4.துரைசாமிப்பிள்ளை ஔவை சு. (2007), புறநானூறு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., 522, டி.டி.கே.சாலை, ஆள்வார்பேட்டை, சென்னை-18. பாடல். 347*

*5.துரைசாமிப்பிள்ளை ஔவை சு. (2007), புறநானூறு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., 522, டி.டி.கே.சாலை, ஆள்வார்பேட்டை, சென்னை-18. பா.319*

6.ஊரன் அடிகள், (1981), திருஅருட்பா தொகுதி 1-2, இராமலிங்கர் பணிமன்றம், சென்னை-86, பா.எண்-4083

7.தமிழ்ப்பிரியன் (உ.ஆ) சித்தர் பாடல்கள் ,கற்பகம் புத்தகாலயம் சென்னை

17, முதற்பதிப்பு 2014 கடுவெளிச் சித்தர் பாடல் எண்-30

8.தமிழ்ப்பிரியன் (உ.ஆ) சித்தர் பாடல்கள் ,கற்பகம் புத்தகாலயம் சென்னை 17, முதற்பதிப்பு 2014 சிவவாக்கியர் .,பா.5

9. ஊரன் அடிகள், (1981), திருஅருட்பா தொகுதி 1-2, இராமலிங்கர் பணிமன்றம், சென்னை-86, பா.எண் 3794

10. தமிழ்ப்பிரியன், (2012) சித்தம் தெளிவிக்கும் சித்தர் சிவவாக்கியர் பாடல்கள் நர்மதா

பதிப்பகம்,சென்னை-17 ப.32

11. தமிழ்ப்பிரியன், (2012) சித்தம் தெளிவிக்கும் சித்தர் சிவவாக்கியர் பாடல்கள் நர்மதா

பதிப்பகம்,சென்னை-17 ப.157